06-09-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : இலங்கையில் வர்க்கக் கட்சி ஒன்றைக் கட்டியெழுப்புவதில் உள்ள சவால்கள்**

**தொடக்க உரையாடல் : சி. கா. செந்திவேல்**

இலங்கையில் தொழிலாளி வர்க்கக்கட்சியினைக் கட்டுவதில் நிலவுடைமைக் கருத்தியலும் சிந்தனையும் மிகக்கெட்டியான தடைக்கல்லாக இருந்து வருகிறது. இதில் மதமும் பண்பாடும் சமூக நிலையின் அடித்தளம் வரை வலிமையுடன் இருந்துவருவதாகும்.

இலங்கை ஏறத்தாழ 450 ஆண்டுகால கொலனித்துவ அடிமைத்தனத்தின் கீழ் ஊறி நின்ற நாடாகும். நிலவுடைமையும் கொலனித்துவமும் ஒத்திசைவுடன் செயலாற்றி வந்தமை கவனத்திற்குரியதாகும், அதனால் இலங்கையில் அந்நிய கொலனித்துவ ஏகாதிபத்திய எதிர்ப்புக்கான சுதந்திரப் போராட்டங்களோ விடுதலைப்போராட்டங்களோ இடம்பெறவில்லை.

இச்சூழலில் அவற்றை இலங்கையின் இடதுசாரி இயக்கமே 1930களில் முன்னெடுத்தது. அதில் ட்ரொட்ஸ்கியிசம், மார்க்சிச லெனினிசம் என்ற இரு பிரிவுகள் தோன்றி வளர்ந்தன. இதில் பின்னையதே இலங்கையில் தொழிலாள வர்க்கக்கட்சியினை அதற்குரிய அடிப்படைகளில் கட்டிய முதலாவது கட்சியாகும்.

இத்தகைய கட்சியினைக் கட்டியெழுப்பி விரிவாக்குவதில் ட்ரொட்ஸ்கியிசம் பெரும் தடைக்கல்லாக இருந்து வந்தது. அதனை எதித்துக் கட்டடப்பட்ட கட்சி பின்பு பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தால் சீரழிந்தது.

அதிலிருந்து தொழிலாளி வர்க்கக்கட்சியினை புரட்சிகர வழியில் கட்டி உருவாக்கப்பட்டதே சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியாகும். அக்கட்சி குறிப்பிட்டளவு தூரத்திற்குப் புரட்சிகரப் போராட்டங்களை முன்னெடுத்தபோதிலும் தொழிற்சங்கவாதத்தினால் சவால்களை எதிர்கொள்ளவேண்டியதானது.

இலங்கையில் ட்ரொட்ஸ்கியிசமும் பாராளுமன்ற சந்தர்ப்பவாதமும் தொழிலாளி வர்க்கக்கட்சியைக் கட்டியெழுப்புவதில் பெரும் பாதிப்பையும் தடையையும் ஏற்படுத்திய அதேவேளை JVP இயக்கமும் அதன் அதிதீவிர குட்டி முதலாளித்துவ நிலைப்பாடும் பின்பு பாராளுமன்ற சந்தர்ப்பவாதமும் சவால்களாக ஆகின.

> இலங்கையில் ட்ரொட்ஸ்கியிசமும் பாராளுமன்ற சந்தர்ப்பவாதமும் தொழிலாளி வர்க்கக்கட்சியைக் கட்டியெழுப்புவதில் பெரும் பாதிப்பையும் தடையையும் ஏற்படுத்திய அதேவேளை JVP இயக்கமும் அதன் அதிதீவிர குட்டி முதலாளித்துவ நிலைப்பாடும் பின்பு பாராளுமன்ற சந்தர்ப்பவாதமும் சவால்களாக ஆகின.

தனியே இளைஞர்களை மட்டும் முன்னிறுத்திய JVP வர்க்கக்கட்சி ஒன்றைக் கட்டுவதற்கு நடைமுறையில் தீங்கிழைத்தது.

இதற்கிடையில் இலங்கையில் தோன்றி வளர்ந்த பெருந்தேசியவாதம் எனும் பேரினவாதமும் அதற்கு எதிர்நிலையில் உருவான குறுந்தேசியவாதமும் இவற்றுக்கிடையிலான போராட்டமும் பெரும் தடையாகின. முப்பது வருடப் போரும் போராட்டங்களும் வர்க்கக்கட்சி ஒன்றைக்கட்டுவதில் பெரும் தடைக்கற்களாகின.

**உரையாடலின் போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் :**

இந்தத்தடைகளை எல்லாம் தாண்டி சிறியளவிலாயினும் இலங்கையில் மார்க்சிச லெனினிச அடிப்படையிலான தொழிலாளிவர்க்கக்கட்சி இருந்துவருவது குறிப்பிடத்தக்கதாகும். அதுவே புதிய-ஜனநாயக மார்க்சிச-லெனினிச கட்சியாகும்.

**மிகுதி அடுத்த பக்கம்**

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

புற்றுநோயும் அதற்கான சிகிச்சை முறைகளும்

லோ. தசாந்தன் | 20-09-2012



C. W. W. கன்னங்கரா

*சீ. டபிள்யூ டபிள்யூ கன்னங்கரா - Christopher William Wijekoon Kannangara (Sinhala:සී.ඩබ්ලිව්.ඩබ්ලිව්.කන්නන්ගර) (October 13, 1884 - September 23, 1969)*

சுதந்திரப் போராளியும் வழக்கறிஞரும் அரசியல்வாதியுமான இவரே இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சராவார்.
இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தை என இவர் போற்றப்படுகிறார். பலமான எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் இவர் கொண்டுவந்த கல்வித்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு :

1. முன்பள்ளி தொடக்கம் பல்கலைக்கழகம் வரை கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

2. தொடக்கப் பள்ளிகளில் பாடம் கற்பிக்கப்படும் மொழியாக மாணவர்களின் தாய்மொழியே பயன்படுத்தப்பட வேண்டும்.

3. மூன்றாம் வகுப்பிலிருந்து அனைத்துப் பாசடாலைகளிலும் ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும் (அக்காலத்தில் ஆங்கிலக்கல்வி குறித்த உயர் குழாத்தைச்சேர்ந்தவர்களின் பிள்ளைகளுக்கே வழங்கப்பட்டுவந்தது)"மூளைக்கும், இதயத்துக்கும் கைகளுக்குமான" கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.


சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## இலங்கையில் வர்க்கக்கட்சி ஒன்றைக் கட்டுவதில் எதிர்நோக்கும் சவால்கள்

முன்பக்கத் தொடர்ச்சி..

இலங்கையில் தற்போதுள்ள வர்க்கநிலை, வர்க்கங்கள் பற்றிய புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தொழிலாளி வர்க்கம் இன்று வர்க்கக்கட்சியோடு தம்மை இணைக்கத் தயாராக உள்ளதா என்பது போன்ற கேள்விகளுக்குப் பதில் காணப்பட வேண்டும்.

எம்மைப் பாதிக்கும் பல பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணமாக இந்த உலகின் உற்பத்தி உறவுகளும் பொருளாதார அமைப்புமே இருக்கிறது என்பது மார்க்சிய ஆய்வுத்துணிபாகும். அதிலும் இன்றுள்ள கட்டகத்தினது(System) பிரதான முரண்பாடாக, மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையில் இருக்கிற முரண்பாட்டையே அது முன்வைக்கிறது. அதாவது மூலதனம் உழைப்பைச் சுரண்டுகிற நிலை காரணமாக மூலதனத்தை வைத்திருப்பவருடன் உழைப்பை வைத்திருப்பவர் கொண்டுள்ள முரண்பாடு. இந்த முரண்பாடு முற்றி வெடிக்குமானால், அதில் உழைப்பை வைத்திருக்கும் பக்கம் வெற்றியடையுமானால் அவ்வெற்றி இந்த உலகின் இன்றைய கட்டகத்தை (System) மாற்றியமைக்கும். எனவே இந்த முரண்பாட்டில் நாம் உழைப்பின் பக்கம் சார்பு நிலை எடுக்க வேண்டியதாயுள்ளது. ஏனெனில் நாம் இந்தக் கட்டகத்தை உடைத்து உலகை மாற்ற விரும்புகிறோம். இந்த முரண்பாட்டின் பிரதான எதிர்முனையாக இருக்கும் தொழிலாளி வர்க்கமே உணர்வு பூர்வமாகவும் ஈடுபாட்டோடும் இந்த வர்க்கச்சண்டையில் பங்குபெறக்கூடியது என்பதே யதார்த்தமாகும்.

### இலங்கையில் இலவச கல்வி எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடிகள்

(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )

இலங்கையின் இலவச கல்விக்கு சந்தித்துள்ள நிகழ்கால பிரச்சனைகளும் அவற்றின் தற்போதைய நிலைமைகளும்.

* மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக கல்விசார் கல்விசார ஊழியர்களின் கோரிக்கைகளும் அதன் பின்புலமும்


* பல்கலைக்கழகக் கல்வித்துறை எதிர்நோக்கும் நெருக்கடிகள், பாடசாலைக்கல்வியும் ஆசிரியர்களும் எதிர்நோக்கும் நெருக்கடிகள்.


இலவச கல்வியின் நெருக்கடியின் பின்னணியில் இயக்கப்படும் உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சி நிரல்.

இலவச கல்வியும் அதன் தோற்றமும் நோக்கமும்.

இலவச கல்வியும் கல்வி சுதந்திரமும்.

இலவச கல்வியின் எதிர்கால நிலைமைகளும் அதை பாதுகாப்பதற்கான போராட்டம் எடுத்து செல்லப்படவேண்டிய பாதையும்.




### விடுதலை ஓர் இனத்தின் கனவு

அகமும் முகமும் புதைந்த
உருவற்ற வெளியின் சிதைவுகளில்
எனக்கான விடுதலையையும்
எனக்கான சுதந்திரத்தையும்
பாடல்களில் இசைக்கிறேன்

பேய்கள் சிதைத்த நிலத்திலிருந்தும்
கொலையுண்ட கல்லறைகளிலிருந்தும்
எனது பிரகடனத்தின் சொற்கள் எழுகின்றன
துரத்தப்பட்ட ஊரின் குழந்தைகள்
அந்தச்சொற்களை உச்சரிக்கிறார்கள்
கசிகின்ற முதுகண்களில்
அந்த சொற்கள் உறைகின்றன
எரிந்த நிலமெங்கிலும் அலைவுறும் ஆன்மாக்கள்
இன்னுமின்னுமாய் அதே சொற்களை ஆர்ப்பரிக்கின்றன

நிலமெங்கிலும் பேய்கள் பெருநடம் புரிகையில்
பசியில் அலையும் கொடுமிருகம்
மண்ணை தின்னத்தின்ன
மரத்தில் இருந்தும் மலைமுகட்டில் இருந்தும்
எனது சொற்கள் உதிர்கின்றன
மூடப்பட்ட பதுங்கு குழிகளுள்
மூடாது விரிந்த விழிகளின் பார்வை
உறையும் புள்ளிகளெங்கிலும்
விடுதலையின் சொற்கள் அழுகின்ற சத்தத்தில்
குழந்தைகள் அரண்டெழுகிறார்கள்

விடுதலை பிரபஞ்சத்தை உடைக்கிறது
விடுதலை கண்ணீரிலும் உதிரத்திலும்
உயிர்க்கிறது
விடுதலை ஒரு இனத்தின் கனவு
விடுதலை உடைத்துயரும் வீரத்தின் விலை
விடுதலை ஆனந்தத்தின் உச்சம்
விடுதலை ஆன்மாவின் யாத்திரை
விடுதலை ஒரு அறைகூவல்
விடுதலை எப்போதும் அடுக்கப்பட்ட
முன்னோர்களின் சிதைகளிலிருந்தே
எழுவதாயிருக்கிறது

-பா. சுஜந்தன்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடலைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA